**திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அ.வ.எண்:11 /2022**

**வா.சா.1**

**நாள்: 17.11.2022**

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது ஃபாருக் | | |
| தந்தை பெயர் | அப்துல் ஹமீது | | |
| கிராமம் | கண்டியூர் | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திருவையாறு | வயது | 61 ஆண்டுகள் |

**வா.சா.1: முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் வாதியாவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இவர் மூலம் கீழ்காணும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1) 07.12.1999 ஆம் தேதி குஜராத்தி அசோசியேசன் நிர்வாகி தாவா சொத்தை வாதியிடம் விற்பனை செய்த பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் அசல். வா.சா.ஆ.1.

2) 1998–1999 குஜராத்தி அசோசியேசன் வெளியிட்ட ஆண்டறிக்கை. வா.சா.ஆ.2.

3) 21.10.2021 தேதி குஜராத்தி அசோசியேசன் தர்மங்களில் பூர்வீக சரித்திரம் சான்றிட்ட நகல். வா.சா.ஆ.3.

4) 29.09.2021 1 ஆம் தேதி பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். வா.சா. ஆ.4.

5) 25.10.2021 ஆம் தேதி வாதி 1 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அஞ்சலக ஒப்புகை அட்டை அசல். வா.சா.ஆ.5.

6) 01.11.2021 ல் 3ஆம் பிரதிவாதியிடம் வாதி கொடுத்த மனு மற்றும் ரசீது. அலுவலக நகல் .வா.சா.ஆ.6.

7) 23.07.2021 ஆம் தேதி தாவா சொத்தில் உள்ள மின்அட்டை அசல். வா.சா.ஆ.7.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.